உ

சிவமயம்

உதவி வைத்திய கலாநிதி

# திரு. செ. தியாகராசா



# நினைவு மலர்

# SOUVENIR

8-11-1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் மூளாயூர் வாசரும்
சைவ வேளாண் குல திலகரும்
காரைநகர் களபூமி இருமரபினும் துய்ய மானுமுதலியார்
வழித்தோன்றல்

ஸ்ரீமான்

# செல்லத்துரை தியாகராசா

அவர்களின்

# நினைவு மலர்

**8-11-1987**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அன்புத் தெய்வத்தின்
நினைவு மலரை
அவர்களின் பாதமலர்களில் சூட்டி
பாசத்துடன் வணங்குகின்றோம்

திருமதி நாகபூஷணி தியாகராசாவும்
மகள் யசோதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதவி வைத்திய கலாநிதி

## அமரர் செ. தியாகராசா அவர்கள்

| | |
|---|---|
| தோற்றம் | அமரத்துவம் |
| **4-4-1923** | **9-10-1987** |

### திதி வெண்பா

*பிரபவ ஆண்டு புரட்டாதிப் பின்பால்*
*திருதியை நாளே சிவன்தாள் — கருதுமன்புச்*
*செல்வத் தியாகராசர் தேகச் சிறைவிடுத்து*
*நல்லகதி நண்ணிய நன்ஞள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் திரு. செல்லத்துரை தியாகராசா

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

## பிறப்பு :

சீரும் திருவும் பொலிந்து விளங்கும் ஈழத்திருநாட்டின் சிரமெனத் திகழும் யாழ்ப்பாணத்தில் சரித்திரப் பிரசித்திபெற்ற காரை நகர் களபூமியில் இருமரபினுந்துய்ய மானமுதலியார் கோத்திரத்தின் வழிவந்த மூளாய் ஸ்ரீமான் அப்பாப்பிள்ளை செல்லத்துரைக்கும், அராலி தெற்கு இருமரபேந்திய முதலியார் வழிவந்த சிற்றம்பலம் நல்லம்மாவிற்கும் 1923-ம் ஆண்டு பங்குனி மாதம் 21-ம் திகதி (4-4 1923) சிரேஷ்ட புதல்வனகப் பிறந்தார். இவருக்கு காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, சந்திரசேகரம், சரஸ்வதி, சிவபாக்கியம் உடன்பிறப்புக்களாவர். தனது அன்புக்குப் பாத்திரமான இளைய சகோதரி சிவபாக்கியத்தின் கணவர் அமரர் திரு. செல்லையா பரஞ்சோதி (Barristor) மிக அண்மையில் (5-8-87) மலேசியாவில் காலமான செய்தி அவரைத் துயரத்தில் ஆழ்த்தியது. கடமையே கண்ணுன அமரர் தியாகராசா அவர்கள் குடும்பப் பாரத்தை ஏற்று அவர்கள் தம் நலனுக்காக அரும்பாடுபட்டு ஒரு தியாகச் சுடராக விளங்கினர்.

## கல்வி :

அமரர் செ. தியாகராசா அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் பயின்றர். பின்னர் சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும், கொழும்பு மருத்துவக் கல்லூரியிலும் கல்வி கற்று ஓர் உதவி வைத்தியராக (R. M. P.) 1949-ம் ஆண்டு வெளியேறினர். 1974-ம் ஆண்டு கொழும்பு வைத்திய ஆலோசனைக்குழு (Colombo Medical Council) அவருக்கு வைத்திய கலாநிதி (D R) என்ற சான்றிதழை வழங்கியது.

## தொழில் :

அமைதியும் அடக்கமும், அன்பும் பண்பும், இரக்கமும் கருணையும், இனிய சுபாவமும், சமய ஆசாரமும், தெய்வீக வழிபாடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருங்கே அமையப் பெற்ற அமரர் திரு தியாகராசா அவர்கள் உடல் பிணி தீர்க்கும் மருத்துவத் தொழிலை தேர்ந்து எடுத்தமை மிகப் பொருத்தமானதென்றே சொல்ல வேண்டும். 1949-ம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி உதவி வைத்திய அதிகாரியாக அரசினர் சேவையில் புகுந்தார். தனது முதல் சேவையை இங்கினியாகலையில் ஆரம்பித்து கோணகம, மன்னார், சாவகச்சேரி, அனுராதபுரம் ஆகிய வைத்திய சாலைகளில் பணிபுரிந்தார். இறுதியில் தம்புல்ல அரசினர் வைத்திய சாலையில் கடமையாற்றி 17-12-1978-ல் ஓய்வு பெற்றார். அமரர் தமது சேவைக் காலத்தில் நோயாளர்களின் நன்மதிப்பைப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## திருமணம்:

அமரர் தியாகராசா அவர்கள் குடும்பத்தில் மூத்த மகனாகப்பிறந்து தான் செய்யவேண்டிய கடமைகளைப் பெற்றோருக்கும் சகோதர சகோதரிகளுக்கும் செய்த பின்னரே தமது முப்பத்தி எட்டாவது வயதில் (24-8-1961) இல்லற வாழ்வில் புகுந்தார். அராலி தெற்கு இருமரபேந்திய முதலியார் வழி வந்த ஸ்ரீமான் சிற்றம்பலம் சிதம்பரப்பிள்ளையினதும் (Retired Apothecary, Seremban Malaysia) மூளாய் இருமரபினும் துய்ய மாணுமுதலியார் வழிவந்த அப்பாப்பிள்ளை பார்வதிப் பிள்ளையினதும் ஏகபுதல்வியும், தனது மைத்துனியுமான நாகபூஷணியை (கலைப்பட்டதாரி ஆசிரியை கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் காரைநகர்) திருமணம் புரிந்தார்.

''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'' — என்னும் தெய்வப் புலவர் திருவள்ளுவரின் வாக்கிற்கு அமைய இல்லற வாழ்வைச் சிறப்பாக நடாத்தினர்.

''பெற்றான் பெறின் பெறுவர் பெண்டிர் பெருஞ் சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு'' — என்னும் குறட்பாவின் கருத்துக்கு அமைய அவரது இல்லத்தரசியும் அவர் மனம்களிப்ப இல்லற வாழ்வைச் சிறப்பித்தார். இல்லற வாழ்வில் தனது நெருங்கிய உறவினர்களுடன் அன்புடனும் பாசத்துடனும் பழகினர். அவரது ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளது குழந்தைகள் அவரை ''கண்ணாடி மாமா'' என செல்லமாக அழைப்பர். அவரது குண நலன்கள் காரணமாக நண்பர்கள் பலர் அவருக்கு அமைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கட் பேறு:

திருமணவாழ்வில் சில வருடங்கள் மக்கட் செல்வம் இல்லாமை அமரர் தியாகராசா அவர்களுக்கு பெரும் கவலையைக் கொடுத்தது. பாம்பணையில் பள்ளிகொள்ளும் பரந்தாமன் கூர்ம அவதாரம் எடுத்து கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பொன்னாலை வரதராஜப் பெருமான் தாள் பணிந்தார். வேண்டுவார் வேண்டுவதை நல்கும் நாராயணன் அருளால் செல்வி யசோதை பிறந்தார். கண்ணனுக்கே தன் செல்வப் புத்திரியை விற்று வாங்கி எம்பெருமான் தாயின் திருநாமம்— யசோதை — எனப் பெயரிட்டார். காரைநகர் தியாகராசா ம. ம.வித்தியாலத்தில் கல்வி பயின்று, இன்று யாழ் பல்கலைக் கழகத்தில் இரண்டாவது வருட பொருளியல் (Special) மாணவியாக செல்வி யசோதை திகழ்வதற்கு அடிப்படைக் காரணம் அமரர் காட்டிய ஊக்கமும் வழங்கிய அறிவுரைகளுமேயாம்.

## இறைவழிபாடு :

சிறு வயதிலேயே தீட்சை பெற்று சமய ஆசார முறைப்படி ஒழுகி வந்தார். நாள்தோறும் விநாயகர் கவசம், விஷ்ணுஸ்தோத்திரம் திருமுறைகள் ஆகியவற்றைப் பாராயணம் செய்வார். மூளாயம்பதியில் அருளாட்சிபுரியும் தான்தோன்றி சித்திவிநாயகப்பெருமானுக்கும், முத்துக்குமாரசுவாமிக்கும் திருவெம்பாவை முதற்பூசையை சிறப்பாக நடாத்தி மகிழ்ச்சி அடைவார்.

## பிரிவு:

அமரர் திரு. தியாகராசா அவர்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகையில் மனைவி, மகள், தாய், மாமி அழுது புலம்ப, உறவினர்கள் நண்பர்கள் துயரத்தில் மூழ்க, அன்பர்களானோர் அதிர்ச்சி அடைந்து நிற்க, மின்னுமல் முழங்காமல், மரணவேதனையின்றி திடீரென ஆண்டு 65 நிகழ, நேசமுடன் இறைவன் கழல் சேர்ந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# திரு. செல்லத்துரை தியாகராசா

அவர்கள்

## அனுதினம்

## விரும்பிப் பாராயணம் செய்யும்

## ஸ்தோத்திரப் பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# காசிப முனிவர் அருளிய விநாயகர் கவசம்

வளர் சிகையைப் பராபரமாய்
வயங்கு விநாயகர் காக்க
வாய்ந்த சென்னி

அளவுபடா அதிக சவுந்
தரதேக மகோற்கடர் தாம்
அமர்ந்து காக்க

விளரற நெற்றியை என்றும்
விளங்கிய காசிபர் காக்க
புருவந் தம்மைத்

தளர்வில் மகோதரர் காக்க
தடவிழிகள் பால சந்
திரனர் காக்க

கவின் வளரும் அதரம் கச
முகர் காக்க கால் அங்கணக்
கிரீடர் காக்க

நவில் சிபுகம் கிரிசை சுதர்
காக்க நனிவாக்கை விநா
யகர் தாம் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவிர் நகை துன்முகர் காக்க
அள் எழிற் செஞ்செவி பாச
பாணி காக்க

தவிர்தலுறு திளங் கொடி போல்
வளர்மணி நாசியைச் சிந்தி
தார்த்தர் காக்க

காமரு பூமுகந் தன்னைக்
குணேசர் நனி காக்க களம்
கணேசர் காக்க

வாமமுறும் இரு தோளும்
வயங்கு கந்த பூர்வசர் தாம்
மகிழ்ந்து காக்க

ஏமமுறு மணிமுலை விக்
கின விநாசன் காக்க
இதயந் தன்னைத்

தோமகலுங் கணநாதர்
காக்க அகட்டினைத் துலங்கே
ரம்பர் காக்க

பக்கம் இரண்டையுந் தரா
தரர் காக்க பிருட்டத்தைப்
பாவம் நீக்கும்

விக்கினகரன் காக்க
விளங்கிலிங்கம் வியாள
பூடணர் தாம் காக்க

தக்க குய்யந் தன்னை வக்
கிர துண்டர் காக்க
சகனத்தை அல்லல்

உக்க கணபன் காக்க
ஊருவை மங்கள மூர்த்தி
உவந்து காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ் முழந்தாள் மகா புந்தி
காக்க இருபதம் ஏக
தந்தர் காக்க

வாழ் கரம் கிப் பிரப் பிரசாதனர்
காக்க முன் கையை
வணங்குவார் நோய்

ஆழ்தரச் செய் ஆசா பூரகர்
காக்க விரல் பதும
அந்தர் காக்க

கேழ் கிளரும் நகங்கள் விநா
யகர் காக்க கிழக்கினிற்
புத்தீசர் காக்க

அக்கினியிற் சித்தீசர்
காக்க உமாபுத்திரர்
தென் ஆசை காக்க

மிக்க நிருதியிற் கணே
சுரர் காக்க விக்கின வர்த்
தனர் மேற் கென்னுந்

திக்க தனிற் காக்க வா
யுவிற் கசகன்னர் காக்க
திகழ் உதீசி

தக்க நிதிபன் காக்க
வட கிழக்கில் ஈச
நத்தனரே காக்க

ஏக தந்தர் பகல் முழுதுங்
காக்க இரவினும் சந்தி
இரண்டன் மாட்டும்

ஓகையின் விக்கின கிருது
காக்க இராக்கதர் பூதம்
உறு வேதாளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகினி பேய் இவையாதி
உயிர்த் திறத்தால் வரும்
துயரும் முடிவிலாத

வேகமுறு பிணி பலவும்
விலங்குபு பாசாங்குசர் தாம்
விரைந்து காக்க

மதிஞானம் தவம் ஞானம்
மானம் ஒளி புகழ் குலம்
வண் சரீரம் முற்றும்

பதிவான தனம் தானியம்
கிருகம் மனைவி மைந்தர்
பயில் நட்பாதிக்

கதியாவும் கலந்து சர்வா
யுதர் காக்க காமர்
பவுத்திரர் முன்னுன

விதியாரும் சுற்றமெலாம்
மயூரேசர் எஞ்ஞான்றும்
விரும்பிக் காக்க

வென்றி சீவிதம் கபிலர்
காக்க கரியாதியெலாம்
விகடர் காக்க

என்றிவ்வாறிது தனை முக்
காலமும் ஓதிடின் நும்பால்
இடையூ றொன்றும்

ஒன்றுறு முனிவர்காள்
அறிமின்கள் யாரொருவர்
ஓதினலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்ற ஆங்கவர் தேகம்
பிணியற வச்சிர தேக
மாகி மன்னும்

பக்தியுடனே இந்தக் கவசத்தைப் பாராயணம் செய்பவர்களுக்குப் பிணியும் வறுமையும் பேய் பூதங்களால் உண்டாகின்ற பல துன்பங்களும் கவலைகளும் பாவங்களும் நீங்கும்.

# விநாயகர் ஸ்தோத்திரம்

அல்லல் போம் வல்வினை போம்
அன்னை வயிற்றிற் பிறந்த
தொல்லை போம் போகாத்
துயரம் போம் நல்ல
குணமதிகமாம் அருணைக்
கோபுரத்துள் மேவும்
கணபதியைக் கை தொழுதக் கால்

— விவேக சிந்தாமணி

ஒரு கோட்டன் இரு செவியன்
மும்மதத்தன் நால் வாயைங்
கரத்தன் ஆறு
தரு கோட்டம் பிறை இதழித்
தாழ் சடையான் தரு மொரு
வாரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும் வணங்கி
ஓவாதே இரவு பகல்
உணர்வோர் சிந்தைத்
திரு கோட்டும் அயன் திருமால்
செல்வமும் ஒன்றோ வென்னச்
செய்யும் தேவே

— சிவஞான சித்தியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராம ஜெயம்



# மகா விஷ்ணு ஸ்தோத்திரம்

குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம் தரும் செய்யும்; நீள் விசும்பருளும்
அருளொடு பெரு நிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும், பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்

வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு
அவர் தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உவப்பதோர் பொருளால்
உணர்வெனும் பெரும் பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்

— திருமங்கையாழ்வார்

நன்மை தீமைகள் ஒன்றும் அறியேன்
நாரணா என்னும் இத்தனை அல்லால்
புன்மையால் உன்னைப் புள்ளுவம் பேசிப்
புகழ்வான் அன்று கண்டாய் திருமாலே
உன்னுமாறு உன்னை ஒன்றும் அறியேன்
ஓவாதே நமோ நாரணா என்பன்
வன்மையாவது உன் கோயிலில் வாழும்
வைட்டணவன் என்னும் வன்மை கண்டாயே

— பெரியாழ்வார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கண் அணிநிறமுங் கண்டேன் — செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரி சங்கங் கை கண்டேன்
என்னாழி கண்ணன் பாலின்று

— பேயாழ்வார்

# ஹரி குணமாலை

ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய (ஓம்)

பிறவிதோறும் வினைமிகுந்து பெருகுகின்ற இருளினை
அகல வைக்கும் அருண தீபம் ஓம் நமோ நாராயணாய (ஓம்)

ஊறுதுன்பம் உடல்வியாதி ஊழ் விடாத வறுமையையும்
ஆறவைக்கும் அருள் மருந்து ஓம் நமோ நாராயணாய (ஓம்)

ஏக்கமாம் குழிக்குள்ளே இருண்டுருண்ட வேளையில்
தூக்கிடும் துணைக் கரங்கள் ஓம் நமோ நாராயணாய (ஓம்)

சோகமோஹ தாகமீறிச் சோர்வு விஞ்சும் வேளையில்
கருணையான புனித கங்கை ஓம் நமோ நாராயணாய (ஓம்)

ஜனன மரண பயதரங்க சாகரம் கடத்தியே
உடனு வந்து காக்கும் ஓடம் ஓம் நமோ நாராயணாய (ம்)

கடுகடுத்து முனைதொடுத்த கால சூலம் சீறு நாள்
உயிர் தடுத்த கவசமாகும் ஓம் நமோ நாராயணாய (ஓம்)

ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
உலகெலாம் முழங்கவேண்டும் ஓம் நமோ நாராயணாய (ஓம்)

நாராயணனே நமதாண்டவனும்
நாராயணனே நமதாசிரியன்
நாராயணனே ஞாலத்துயிராம்
நாராயண ஓம் என நாம் பணிவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்ச புராணப் பாடல்கள்

## தேவாரம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னம் நீ புரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித் தேத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப் பெருந்துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைப்பேன்
ஆண்ட நீ அருளிலையானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே

## திருவிசைப்பா

இடர்கெடுத்தென்னை யாண்டு கொண்டென்னுள்
இருட் பிழம்பற வெறிந்தெழுந்த
சுடர் மணி விளக்கினுள்ளொளி விளங்குந்
தூய நற்சோதியுட் சோதீ
அடல் விடைப்பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சொல்லுவதறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லை வந்தருளிஎன்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையிலின்ப வெள்ளமெனக் கருள்செய்தாய் போற்றி
தில்லையம்பலத்துளாடுஞ் சேவடி போற்றியென்ன.

பஞ்ச தோத்திரம் ஓதினல் பன்னிரு திருமுறைகளை ஓதிய பயன் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எம்மைத் துக்க சாகரத்தில் என்றுமே மூழ்கவிட்டு எதிர் பாராத வகையில் திடீரென மறைந்த எங்கள் மாண்பு நிறை தெய்வத்தின் மறைவிலன்றும் பின்னரும் வருகை தந்தும் செய்திகள் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தும், ஆறுதலளித்தும் பல உதவிகளைச் செய்த உறவினர்கள், அயலவர்கள், நண்பர்களுக்கும் சீரற்ற நாட்டு நிலைமையிலும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டு, வருகை தந்து ஆறுதல் அளித்த யா/தியாகராசா மத்திய மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவருக்கும் எங்கள் உளங்கனித்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவிக்கின்றோம்.

மனைவி — நாகபூஷணி
மகள் — யசோதை

ஐயனார் வீதி,
மூளாய்.
08-11-1987

புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org